IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# நற்றிணை – மருதத்திணையில் நகை மெய்ப்பாடு

**முனைவர் சே. பிருந்தா**
**உதவிப்பேராசிரியர் , தமிழ்த்துறை**
**கணேசர் கலை அறிவியல் கல்லூரி**
**மேலைச்சிவபுரி - 622403**

**Dr. S . BRINDHA**
**ASSISTANT PROFESSOR**
**DEPARTMENT OF TAMIL**
**GANESAR COLLEGE OF ARTS AND SCIENCE**
**MELAISIVAPURI - 622407**

**ஆய்வுச்சுருக்கம்**

மக்களுக்கு அறிவூட்டல் , மகிழ்வூட்டல் ஆகிய குறிக்கோளுடன் இலக்கியங்கள் தோன்றுகின்றன . மனிதசமுதாயத்திற்கு எக்காலத்திற்கும் பொருந்துவதான கருத்துக்களை இலக்கியங்கள் கூறுகின்றன . தனிமனிதன் அகம்புற ஒழுக்கங்கள் சமுதாய உருவாக்கத்தில் பங்குவகிக்கின்றன என்றாலும் அக ஒழுக்கங்களே அடிப்படையாக அமைகின்றன . இவ்வகையில் நற்றிணைப் பாடல்களில் புலவர்கள் தங்கள் கருத்துக்களை உரிப்பொருள் உணர்வுகளை பிறர் மனம்கொள்ளத்தக்க வகையில் புலப்படுத்தியுள்ளனர். நற்றிணை நயத்தக்க நாகரிகத்தால் தனிச்சிறப்பிடம் பெறுகிறது . அகமாந்தர்களின் உளச்சித்திரிப்பிலும் , உணர்ச்சி வெளிப்பாட்டிலும் நற்றிணைப் புலவர்கள் கையாண்ட கருத்துப்புலப்பாட்டு நெறியை நகை மெய்ப்பாட்டின் மூலம் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும் . நற்றிணைப் பாடல்களில் எண்வகை மெய்ப்பாடுகள் பயின்றுவந்துள்ளன . அவற்றுள் நகை மெய்ப்பாட்டை மருதத்திணையில் தாயின் அறியாமை , வேலனின் அறியாமைச் செயல் , தலைவியின் ஊடல் போன்ற கருத்துக்களை நற்றிணைப் புலவர்கள் புலப்படுத்தியுள்ள திறம் இவ்வாய்வில் விளக்கப்பட்டுள்ளது .

**குறிப்புச் சொற்கள் :**

இயற்கை , வெறியாட்டு , ஊடல் , எண்வகை மெய்ப்பாடு , அழகியல் , பரத்தையிற் பிரிவு , நகை , உரிப்பொருள் , பண்பாடு , வாழ்க்கை .

**NATTRINAI - MARUDHA THINAIEEL NAGAI MEIPPDU**

**(ABSTRACT)**

Literature appears with the aim of enlightening and entertaining the people. Literature conveys ideas that are relevant to mankind at all times. Internal morals are the basis of human life. Although the concept is fundamental to a literary work, the concept itself cannot become literature. Despite composed of a collection of songs by various poets, Natrinai is united on the basis of a moral values. The purpose of this research is to explain the method of analysis used by the poets in the mental depiction and emotional expression of the Agamandhars through the use of farce and other poetic devices. Eight types of meipaadugal have been learned in Natrinai songs. In this study, the ability of poets to express ideas such as the mother's ignorance, Velan's ignorance, and the leader's slander are explained.

**Key words:** Nature, veriyattu, beauty, meipaadugal, aesthetics, parathaiyar pirivu, farce, Uripporul, culture, life.

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் உலகச் செவ்வியல் இலக்கியங்களோடு ஒப்புநோக்கத்தக்கவை . அவை தமிழர்களின் பண்பாடு , வாழ்க்கை, அழகியல் முதலானவற்றை வெளிப்படுத்தும் ஆவணகளாகத் திகழ்கின்றன. இயந்திரமாகி வரும் சமூகச் சூழலில் மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்வதில்லை . வெறும் பொருளியல் பிண்டமாக வாழும் மனிதனுக்கு நற்றிணைப் பாடல்கள் இயற்கை குறித்த விழிப்புணர்வைத் தருகின்றன . கால ஓட்டத்தில் மனித இனம் இயற்கை சார்ந்த வாழ்க்கை முறையை இழந்திருக்கிறது என்பதை நற்றிணைப் பாடல்கள் உணர்த்துகின்றன. முதாதையரின் வாழ்வு அழகியல் உணர்வு முதலனவற்றை அறிய நற்றிணைப் பாடல்கள் உதவுகின்றன . நற்றிணைப் பாடல்களில் எண்வகை மெய்ப்படுகளின் முலம் புலவர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். இலக்கியத்தின் அடிப்படை கூறுகளுள் ஒன்றாகவும் , கருத்துப்புலப்பாட்டு நெறியில் இன்றியமையா இடத்தைப் பெறுவதும் மெய்ப்பாடாகும். மெய்ப்பாடு உடலில் தோன்றும் மாறுபாட்டைக் குறித்தாலும் புலவர்கள் இலக்கியங்களில் கருத்தைப் புலப்படுத்தும் இலக்கிய உத்தியாகப் பயன்படுத்தியுள்ளனர். எண்வகை மெய்ப்படுகளுள் ஒன்று நகை மெய்ப்பாடு. நகை மெய்ப்பாட்டின் முலம் உரிப்பொருள் உணர்வைப் புலப்படுதியுள்ளனர்.

## மெய்ப்பாடு

இலக்கியம் மனித உள்ளத்தோடு தொடர்புடைய நுண்கலை. இக்கலை கருத்தாலும் நடையாலும் சுவையாலும் படிப்போரைத் தன்வயப்படுத்துகின்றது. சுவை என்பது மெய்ப்பாடாகும். மெய் என்றால் உடம்பு பாடு என்றால் தோன்றுவது உடலில் தோன்றும் மாறுபாடு மெய்ப்பாடு எனப்படுகிறது “ஒருவருக்கு ஒரு நிகழ்வு

நடந்தாலோ அல்லது ஒருவர் ஒன்றைப் பார்த்தாலோ அல்லது சுவைப் பொருளைச் சுவைத்தாலோ உண்டாகும் புற உடல் குறிகளே மெய்ப்பாடு”[1]

தொல்காப்பியர்,

“நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று

அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப”[2]

என்னும் எட்டுவகையான மெய்ப்பாடுகளைக் குறிப்பிடுகிறார்.

“உண்ணிகழ் தன்மை புறத்துத் தோன்ற

எண்வகை மெய்ப்பாட்டி னியல்வது சுவையே “[3]

என தண்டியலங்காரம் மெய்ப்பாட்டிற்கு விளக்கம் தருகிறது.

“நிகழ்ச்சிக்குரியர் பேச்சைக் கேட்டோர்க்கு அவர் கூரிய பொருட்கள் கண்ணெதிரிலேயே தெரியுமாறுபோலப் புலப்பட அதனால் அவர் உணர்ச்சி வயத்தவராகவே அவர்தம் உடம்பிலே சில தோற்றங்கள் புலனாகும் . மெய்யிலே பொருந்திப் புறத்தாருக்குப் புலனாகும் உள்ளுணர்வு வெளிப்பாடே மெய்ப்பாடு எனப்படும்”[4] என்று மு.சண்முகம்பிள்ளை குறிப்பிடுகிறார் .

மொழியின் தோற்றத்திற்கு அடிப்படை மெய்ப்பாடாகும் . தொடக்ககாலத்தில் மெய்ப்பாடு நாடகத்துடன் தொடர்புடையதாக இருந்தது . பின்னர் புலவர்கள் பாடல்களில் பயன்படுத்தத் தொடங்கினர் . மொழியின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படைக் கருவியாக மெய்ப்பாடு இருந்துள்ளது . செய்யுலியலில் ,

“உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்

மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும் .”

என்னும் சூத்திரத்திற்கு உரை எழுதிய இளம்பூரணர் செய்யுட் செய்வார் மெய்ப்பாடு தோன்றச் செய்தல் வேண்டும் என்று கூறுவார். சங்க இலக்கியப் பாடல்கள் அனைத்தும் மெய்ப்பாடு அமையப் பாடப்பெற்றுள்ளன . “ மெய்ப்பாடு மனித நடத்தையோடு தொடர்புடையது . இலக்கியம் மனிதனின் நடத்தையை உணர்வுப்பூர்வமாக விளக்குவது என்ற முறையில் கவிதையில் எதோ ஒரு விதத்தில் மெய்ப்பாடு கட்டாயம் இருக்கும் .அது நுண்ணிய முறையிலும் அமைந்திருக்கலாம் .”[5]

## நகை மெய்ப்பாடு

நகை என்பது இகழ்ச்சியிற் பிறக்கும் மெய்ப்பாடாகும் . “ எள்ளல் , இளமை , பேதைமை , மடம் ஆகிய நான்கு பொருட்களில் தோன்றும் “.

“எள்ளல் இளமை பேதைமை மடன் என்று

உள்ளப்பட்ட நகை நான்கு என்ப” [6]

நற்றிணைப் பாடல்களில் நகை மெய்ப்பாடு பயின்று வந்துள்ளது . தாய் தலைவியின் நிலையைக்கண்டு வெறியயர்கிறாள் . வெறியேடுப்பதைக் கண்ட தோழி வேலணை இகழ்வதுபோல் அறத்தொடு நிற்பதாகப் பிரமசாரி என்னும் புலவர் குறிஞ்சித் திணையில் அமைத்துள்ளார் . களவில் தலைவனின் பிரிவால் வேறுபட்ட தலைவியைக் கண்டு அன்னை வேலனால் ஏற்பட்ட நோய் என்று வெறியாட்டு அயர்கிறாள் . வேலனும் வெறியாட்டு அயரத் தோழி நகையாடுகிறாள் .

“ வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்

கடவு ளாயினும் ஆக

மடவை மன்ற வாழிய முருகே “ (நற்றிணை – 34)

என்று நகைத்தாள் .

தலைவனுக்கு ஏற்பட்ட நோய்க்குக் காரணம் தலைவனே என்று அறியாத அன்னை அறியாமையால் வேலனை வெறியாட அழைக்கிறாள் . அன்னை அறியாமையில் செய்கிறாள் என்றால் வேலன் கடவுளாக இருந்தும் அறியாமை உடையவனாக வெறியயர்கிறாள். கடவுளின் மடத்தன்மையான செயலை எண்ணித் தோழி நகைக்கிறாள் . இப்பாடலில் பயின்று வந்த நகை மெய்ப்பாடு பிறர்கண் தோன்றிய மடமை குறித்த மெய்ப்பாடாகும் .

தாயின் அறியாமையால் வேலன் வெறியாடுவதை ஐங்குறுநூற்றுப் பாடலான,

“கறிவளர் சிலம்பில் கடவுள் பேணி

அறியா வேலன் வேரியனக் கூறும்

அது மனம் கொள்குவை, அனையிவள்

புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே” [7]

“ஒருவன் மற்றொருவனது உள்ளப்போக்கில் தன்னைப்பொருத்தி , அவன் ஈடுபடும் நடத்தையில் தானும் ஈடுபடுவது ஒற்றுணர்ச்சி (empathy) எனப்படும் . இது சார்புணர்சியினின்றும் மாறுபட்டது . கலைஞர் , மிக உயர்ந்த சிந்தனையாளர் ஆகிய மிகச்சிலரிடமே ஒற்றுணர்ச்சி எனும் இம்மெய்ப்பாடு காணப்படும் “[8] . இத்தகைய உணர்ச்சி தோழியிடம் காணப்படுகிறது .

**குறைநயத்தல்** :

அல்லங்கீரனார் பாடலில் குறைநேர்ந்த தோழி தலைமைகளை முகம்புக்கது எனும் துறையில் தலைவிக்கும் தலைவனுக்கும் முன்னரே ஏற்பட்டிருந்த உறவை அறிந்தும் அறியாதவள்போல் தலைவனின் செயல் நகைக்கத்தக்கதாய் அமைந்துள்ளது என்று தலைவியிடம் கூறுவதாக அமைந்திருக்கின்றது .

தலைவனால் நாம் வருந்தி நிற்க அதை அறியாது தலைவன் நம்மால் அவன் வருந்துவதாகக் கூறுகின்றாள் என்று கூறி தலைவியின் நிலையை அறிந்து கொள்ள முற்படுகிறாள் .”அகப்பாடல்களை மெய்ப்பாட்டுடன் படைக்கவேண்டுமேல் அதில் வரும் பாத்திரங்களை அல்லது அப்பாடல்கள் யாருடைய கூற்றாக வருகின்றனவோ அவர்களுடைய இயல்புகளை உளகியலில் உள்ளவாறு புனைய வேண்டும் “[9] என்பர் .

தலைவனே முதலில் தன காதலைத் தோழியிடம் வெளிப்படுத்திக் குறைநயக்கிறான் . இதைக்கேட்ட தோழி ,

“நகையாகின்றே தோழி ! – தகைய

-------------------

சுரும்பு இமிர் சுடர்நுதல் நோக்கி

பெருங் கடற் சேர்ப்பன் தொழுது நின்றதுவே “ (நற்றிணை -245)

என்று தலைவனின் பேதைமைத் தன்மையைக் கண்டு நகைக்கிறாள் . தலைவியும் தலைவனால் வருந்துகிறாள். இது அறியாது தலைவன் பேதைமையுடன் இருப்பதை ,

“ தான் நம் அணங்குதல் அறியான் , நம்மின்

தான் ஆணங்குற்றமை கூறி “

என்னும் அடிகள் தெளிவுபடுத்துகின்றன .

**ஊடல்** :

பரத்தையின் உறவில் மகிழ்ந்த தலைவன் தன வீட்டின் முன்பு விளையாடும் புதல்வனை அணைத்தபடி தலைவியைக் காணச் செல்கின்றான் . அதைக்கண்ட தலைவி நீ யார் ? என்று தலைவனிடம் ஊடுகிறாள் . புதல்வனைத் தூக்கியதால் தலைவன் மார்பில் பூசிய சந்தனம் சிதைந்தது . ஆனால் தலைவி பரத்தையிடம் சென்றதால் சந்தனம் சிதைந்தது என்று கருதி ஊடல் கொண்டாள் . இச்செய்தியைத் தலைவன் பாணனிடம் கூறித் தலைவியை எள்ளி நகையாடுகிறான்

“ நகுகன் வாராய் பாண – பகுவாய்

யாரையோ ? என்று இகழ்ந்து நின்றதுவே “ (நற்றிணை _ 250 )

“இல்லது காய்தல் “ என்னும் தொல்காப்பியர் விதிப்படி தலைவி , தலைவன் செய்யாத செயலைச் செய்ததாகக் கூறி ஊடுகிறாள் என்று நகைக்கிறான் . இதேபோல் இல்லாத ஒன்றை கற்பனை செய்து தலைவி ஊடுகிறாள் என்பதை ,

“ பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்

நண்ணேன் பரத்தநின் மார்பு “[10]

என்ற குறளில் புலப்படுத்துகிறார் வள்ளுவர் .

உறையூர் கதுவாய்ச் சாத்தனார் மருதத் திணையில் தலைவன் கூற்றில் பாடலை அமைத்துள்ளார். பரத்தையிற் பிரிந்து வருகின்ற தலைவனது வரவை அறிந்து தலைவி ஊட பலகால் வேண்டியும் ஊடல் நீங்காமையால் வருந்திய தலைவன் பாணனிடம் தலைவியின் செயல் நகைக்கத்தக்கதாய் உள்ளது என்று கூறுவதாகப் பாடல் பொருள் அமைந்துள்ளது.

புதல்வன் பிறந்தநாளில் முதுபெண்டு என்னும் பெயரை தாங்கித் தலைவி துயிலும்போது தலைவியின் வயிற்றில் குவளை மலரால் ஒற்றிச் சில பொழுது பேசிய என்னைக் கண்டு கண்புதைத்து நகைத்தாள் அத்தகைய தலைவி இன்று என் மீது ஊடல் கொண்டு நிற்கின்றாள் ஆதலால்,

“வாராய் பாண நகுகம் நேரிலை

-------------------------

புதல்வன் ஈன்றெனப் பெயரபெயர்த்து

---------------------

முகைநாள் முறுவல் தோற்றித்

தகைமலர் உண்கண் புதைத்துவந் ததுவே” ( நற்றிணை 370)

என்று தலைவன் பாணனிடம் தலைவியின் செயலைக் கூறி நகை செய்கிறான்.

புதல்வனைப் பெற்ற காலத்தில் தலைவி செய்த செயலை நினைக்கும் தோறும் நகைப்பாய் இருக்கிறது என்று தலைவன் தலைவி ஊடலோடு இருப்பதை எண்ணி வருத்தத்தோடு நகைத்துக் கூறுகின்றான்.

கோண்மா நெடுங்கோட்டனார் மருதத்திணையில் பரத்தை கூற்றாக நகை மேம்பாடு தோன்றப் பாடியுள்ளார் தலைமகன் பரத்தையிற் பிரிந்த காலத்தில் தலைவிபாற் செல்வதைக் கண்ட பரத்தை தலைவியின் உறவினர்கள் கேட்கும்படியாகத் தலைவனைப் பழித்துப் பேசி நகைக்கிறாள். தலைவன் தனக்கு மகன் பிறந்தான் என்னும் மகிழ்ச்சியில் இரவு நேரத்தில் செவிலியும் தலைவியும் உறங்கிய பின்னர் யாருக்கும் தெரியாமல் கள்வனைப்போல வருகின்றான் என்று அவனது செயலைப் பரத்தை எள்ளி நகையாடுகிறாள்.

“சீர்கெழு மடந்தை ஈரிமை பொருந்த
நள்ளேன் கங்குற் கள்வன் போல
அகன்துறை யூரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே” ( நற்றிணை 40”)

**முடிவுரை**

இலக்கியத்தின் அடிப்படைக் கூறு மெய்ப்பாடு. இலக்கியங்களின் கருத்தைப் புலப்படுத்தும் இலக்கிய உத்தியாகப் பயன்படுவது மெய்ப்பாடாகும். நற்றிணைப் புலவர்கள் அகமாந்தர்களின் உளச்சித்திரிப்பையும், உணர்ச்சி வெளிப்பாட்டினையும் மெய்ப்பாட்டின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். வெறியாட்டு, இயற்பழித்தல், ஊடல், குறைநயத்தல் போன்ற துறைகளில் தாயின் அறியாமை, வேலனின் அறியாத செயல், தலைவனின் பேதமைத் தன்மை, தலைவியின் ஊடல் , பரதையின் செயல் போன்ற கருத்துக்களை நகை மெய்ப்பாட்டின் மூலம் நற்றிணைப் புலவர்கள் புலப்படுத்தியுள்ளனர்.

**அடிக்குறிப்பு**

1. செ.வை.சண்முகம்., கவிதை கட்டமைப்பு ., g 207
2.தொல், பொருள்,மெய்ப்,சூ247
3.தண்டியலங்காரம், 69
4.சண்முகம் பிள்ளை, மெய்ப்பாடு., ப.64
5.செ.வை. சண்முகம் கவிதைக் கட்டமைப்பு ப.235
6. தொல், பொருள்,மெய்ப்,சூ248
7.ஐங்குறுநூறு, 243
8.தா.ஏ.சண்முகம்., உளவியல்,உம் பாகம், ப.61
9.குறள். 1311

**துணைநூற்பட்டியல்**:

செ.வை.சண்முகம்., கவிதை கட்டமைப்பு,சென்னை, 2003
சண்முகம் பிள்ளை, மெய்ப்பாடு, மதுரை ,1974
தா.ஏ.சண்முகம்., உளவியல் உம் பாகம்,சென்னை,1961
ஐங்குறுநூறு,மூலமும் உறையும், சென்னை,2006
தண்டியலங்காரம் ,சென்னை, 1998
திருக்குறள், பரிமேலழகர் உரை, சென்னை,2002
தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை,2000

சங்க இலக்கியங்கள் உலகச் செவ்வியல் இலக்கியங்கலோடு ஒப்புநோக்கத்தக்கவை . அவை தமிழர்களின் பண்பாடு , வாழ்க்கை, அழகியல் முதலானவற்றை வெளிப்படுத்தும் ஆவணகலாகத் திகழ்கின்றன .